**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.185** **நாள் : 19.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலத்தடிநீர் மாசுபடுதலை தடுத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.ஜோதிமணி அவர்கள் தலைமையில் இன்று (19.11.2018) நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலத்தடிநீர் மாசுபடுதலை தடுத்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.ஜோதிமணி அவர்கள் தலைமையில் இன்று (19.11.2018) ரிப்பன் மாளிகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலுள்ள 200 கோட்டங்களில் திடக்கழிவு மேலாண்மைத்துறை சார்பாக 19,200 தூய்மை பணியாளர்கள் (தனியார் மற்றும் NULM உட்பட) 5400 மூன்று சக்கர மிதிவண்டிகள், 14,500 காம்பேக்டர் குப்பைத் தொட்டிகள், 370 காம்பேக்டர் (கனரக மற்றும் இலகுரக), 22 டாரஸ் கனரக வாகனங்கள், 19 இயந்திர பொக்லைன்கள், 57 ஸ்கிட் லோடர் இயந்திரங்கள், 21 முன் பளுதூக்கும் லோடர்கள் மூலமாக தினந்தோறும் சுமார் 5400 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டு, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் குப்பைக் கொட்டும் வளாகத்தில் கொட்டி சமன் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இதுநாள் வரை சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை எவ்வாறு கையாளுவது, மேலும் அன்றாடம் சேகரிக்கப்படும் குப்பைகளை எவ்வாறு மேலாண்மை செய்வது என்பது குறித்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென்மண்டல கண்காணிப்புக் குழுத் தலைவர் நீதியரசர் திரு.ஜோதிமணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாக்கவும், நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுக்கவும் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய துணை தலைமைப் பொறியாளர் திரு.கோபாலகிருஷ்ணன், இந்திய தொழில்நுட்ப கழக பேராசிரியர் டாக்டர் இந்துமதி, அண்ணாபல்கலைகழக பேராசிரியர் டாக்டர் குரியன் ஜோசப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**